# பிரம்மஸ்ரீ நீலக்கல் ராமச்சந்திர சாஸ்திரிகளுடைய சுயவிவரக் குறிப்பு

சௌபாக்ய சிந்தாமணி என்னும் பழைய நூல் காஞ்சியில் அமைந்துள்ள ஸ்ரீகாமாட்சியம்மன் ஆலயத்தைப் பற்றியும், அங்கு அம்பாளுக்குப் பல்லாண்டு சேவை செய்து வந்த குடும்பத்தினர் பற்றிய விவரங்களையும் தெரிவிக்கிறது. அதன்படி ஆறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் காஞ்சியில் வசித்து அம்பாளுடைய ஆலயத்தில் நித்திய பூஜைகளைச் செய்து வந்தார்கள். அவர்களில் நான்கு கோத்திரத்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தஞ்சைக்குச் சென்று விட்டனர். தற்போது பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பத்தினர், கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் ஆக மூன்று குடும்பத்தினர் காஞ்சியில் ஸ்ரீகாமாட்சி அம்பாளுக்குச் சேவை செய்து வருகிறார்கள்.

பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகளுடைய குடும்பம் பழைய பாரம்பர்யம் கொண்ட 'நீலக்கல்' வகையறாவைச் சேர்ந்தது.

இவர்களுடைய முன்னோர்கள் பற்றிய விவரம்:

1. ஸ்ரீஅருணாசல சாஸ்திரிகள் - இவருடைய புத்திரர்

2. ஸ்ரீராமஸ்வாமி சாஸ்திரிகள் - இவருடைய புத்திரர்

3. ஸ்ரீகச்சபேஸ்வர சாஸ்திரிகள் - இவருடைய புத்திரர்

4. ஸ்ரீகிருஷ்ண சாஸ்திரிகள் - இவருடைய புத்திரர்

5. ஸ்ரீமுத்துஸ்வாமி சாஸ்திரிகள் - துணைவியார் தர்மசம்வர்த்தினி அம்மாள்

(தர்மசம்வர்த்தினி அம்மாள் தர்மாம்பாள் என்ற பெயராலும் அறியப்படுகிறார். இவர் கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீசியாமா சாஸ்திரிகளின் பெயர்த்தியாவார்.)

இவர்களுடைய புத்திரர்,

6. ஸ்ரீநடராஜ சாஸ்திரிகள் - துணைவியார் அலமேலு அம்மாள்

(அலமேலு அம்மாளுடைய தந்தையார் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஒரு முக்கிய பொறுப்பில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.)

இவர்களுடைய புத்திரர்,

7. ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகள் - துணைவியார் அலமேலு அம்மாள்

இவர்தம் பிறப்பு:

1938ஆம் ஆண்டு (தமிழ் வெகுதான்ய வருஷம்) வைகாசிப் பூரத்தில் பிறந்தார். காஞ்சி காமாட்சி அம்பாள் சன்னிதித் தெருவில் உள்ள தம்முடைய பூர்வீக பாரம்பர்யமான வீட்டில் வளர்ந்தார்.

உடன்பிறந்தோர்:

ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகளுக்கு இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரரும் உள்ளனர். மூத்த சகோதரியின் பெயர் காமாட்சி (அக்கா). இளைய சகோதரியின் பெயர் ஜெயலட்சுமி (தங்கை). இளைய சகோதரரின் பெயர் முத்துஸ்வாமி சாஸ்திரிகள் (தம்பி).

ஆரம்பக் கல்வி:

காஞ்சிபுரம் எஸ்.எஸ்.கே.வி பள்ளியிலும், கா.மு.சுப்பராயர் பள்ளியிலும் எட்டாம் வகுப்பு வரையில் படித்தார். அதன் பின்னர் தம்முடைய பாரம்பரிய வழக்கப்படி வேத, சாஸ்திர கல்வியில் ஈடுபடுத்தப்பட்டார்.

உபநயனமும் வேதக் கல்வியும்:

1949ஆம் ஆண்டு அவருடைய 11ஆவது வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டது. அதன் பிறகு கீழம்பியில் அமைந்துள்ள வேத பாடசாலையில் 5 ஆண்டு காலம் பயின்றார். அங்கு தர்க்கம், வியாகரணம், வேதாந்தம், மீமாம்சை ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தார். அச்சமயத்தில் தென்னிந்தியாவில் தலைசிறந்து விளங்கிய ஆசிரியர்களான பண்டிதர் வேப்பத்தூர் சுப்ரமணிய சாஸ்திரிகள், சிதம்பரம் ரங்கநாத சாஸ்திரிகள் (காவ்யம்), போலகம் ராமா சாஸ்திரிகள், ஆந்திரா மண்டலி வெங்கடேச சாஸ்திரிகள், எஸ்.ஆர். கிருஷ்ணமுர்த்தி சாஸ்திரிகள் ஆகியோரிடம் பாடம்

கற்றார். இவருடன் சேர்ந்து ஸ்ரீகாஞ்சி காமகோடி 69ஆவது பீடாதிபதியான ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் வேத பாடசாலையில் பாடம் பயின்றார். மிகவும் சிறப்பான செய்தி என்னவெனில், காஞ்சியை அடுத்துள்ள ஓரிக்கை கிராமத்தில் ஸ்ரீகாஞ்சி காமகோடி 68ஆவது பீடாதிபதி மஹா பெரியவா ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸ்வாமிகளிடம் பர்த்ருஹரி (வைராக்கிய சதகம்) என்னும் பாடம் பயின்றார். மேலும், திருச்சியை அடுத்துள்ள திருவானைக்காவலில் வித்யாஸ்தானம் டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகளிடம் சித்தாந்த லேச சங்கிரகம் என்னும் நூலைப் பயின்று அத்வைத சதஸில் பரீட்சை (1960-62) கொடுக்கப்பட்டது.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயப்பணி:

1962ஆம் ஆண்டு காஞ்சி மஹாஸ்வாமிகளின் அனுக்கிரகத்துடனும், அனுமதியுடனும், ஸ்ரீகுஹானந்த மண்டலி ஸ்வாமிகளிடம் தீட்சை பெற்று அம்பாள் சன்னிதியில் பூஜை செய்யும் சேவையைத் தொடங்கினார். அன்று தொடங்கி சுமார் 50 ஆண்டு காலம் இடைவிடாது அம்பாள் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

திருமணம் - குடும்ப வாழ்க்கை:

1966ஆம் ஆண்டு ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகளுக்கும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அலமேலு அம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு 4 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் முடிந்து, சாஸ்திரிகள் பெயரன், பெயர்த்திகளோடு உள்ளார். இவருடைய நான்கு மகன்களும் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்திலேயே பூஜை செய்யும் சேவையில் உள்ளனர். தம்முடைய பாட்டியாரான தர்மாம்பாள் மூலமாக சங்கீத மும்மூர்த்தி ஸ்ரீசியாமா சாஸ்திரிகள் வழிவந்த ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகள் இந்த நினைவைப் போற்றும் வகையில் தம்முடைய புத்திரர் ஒருவருக்கு ‘சியாமகிருஷ்ணன்’ என்று பெயர் வைத்துள்ளார். மேலும் தம்முடைய மூத்த மகளுக்கும், பெயர்த்திக்கும் ‘தர்மாம்பாள்’ என்று பெயரிட்டுள்ளார்.

ஆலயத்தில் பாரம்பரிய உரிமை:

பூஜை, நிர்வாகம் தொடர்பாக மொத்தம் உள்ள 4 வட்டங்களில் 2 வட்டங்களின் உரிமை நீலக்கல் வகையறாவைச் சேர்ந்தது. எனவே ஒரு வருடத்தில் 6 மாத பூஜையும், பிரசாதங்களும் இவர்களுக்கே உரியன மேலும் ஆலயத்தின் ஆபரணக் கொட்டடியின் (பொக்கிஷம்) 5 சாவிகளில் 2 சாவிகள் இவர்களிடமே உள்ளன. நீலக்கல் குடும்பத்தினரின் மற்றொரு சிறப்பு என்னவெனில், இவர்கள் காமாட்சி அம்பாள் ஆலயத்தைத் தவிர வேறு ஆலயங்களுக்கோ, அல்லது பிற இடங்களுக்கோ பூஜை, ஹோமம் என்று எதற்காகவும் செல்வதில்லை.